சார்பு நீதிமன்றம் மன்னார்குடி

**முன்னிலை: -**S.முத்துராமன், B.L.,

சார்பு நீதிபதி, மன்னார்குடி

2057 திருவள்ளுவராண்டு , ஸ்ரீ விசுவாவசு ஆண்டு மாசி மாதம் 28 ம் தேதி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் தேதி

**அசல் வழக்கு எண்.128/ 2021**

CNRNo.TNTV05-000545-2021

அருண்மொழி ...வாதி

/எதிர்/

1.மோகன் தாஸ்

2. யோகானந்தம்

3. பேபி

4. ரேவேந்திரன்

5. ரேஷ்மா

6. மண்டல மேலாளர், விவசாய காப்பீட்டு நிறுவம், சென்னை.

7. செயலாளர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, சித்தமல்லி

8. கிராம நிர்வாக அலுவலர், சித்தமல்லி.

9. வட்டாட்சியர், மன்னார்குடி.

10. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், திருவாரூர். ..... பிரதிவாதிகள்

பிரதான அசல் வழக்கானது என் முன்பு கடந்த 17.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிக்காக வழக்கறிஞர் திரு.S.உதயகுமார் அவர்களும் 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ரவிச்சந்திரன் அவர்களும் 6 ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார் அவர்களும், 7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் அரசுவழக்கறிஞர் திரு. M.அன்புச் சோழன் ஆஜராகியும், 6 ம் பிரதிவாதியினுடைய எதிர்வழக்குரையை ஏற்றுக்

கொண்டு இதுநாள் வரை என்னுடைய பரிசீலினையில் இருந்து வந்து ஆவணங்கள் சாட்சிகளை பார்வையிட்டு இன்று (12.03.2026)இந்த நீதிமன்றம் வழங்கும்..........

**தீர்ப்புரை**

வாதி இந்த வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்.

1). **வாதி தரப்பில் வழக்குரை சுருக்கம்**:-

தாவா சொத்து சித்தமல்லி கிராமத்தில் அமைந்துள்ள ஹெக்.8.23.5 ஏர்ஸ் நஞ்சை புஞ்சை நிலங்கள் ஆகும். இவை யாவும் பட்டவெளி கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் சுதந்திர போராட்ட வீரர் மாரியப்ப வள்ளாலத் தேவருக்கு சொந்தமானது. அவர் எந்தவித எழுத்துமூலமான ஏற்பாடுகளும் செய்து வைக்காமல் 2008 ஆம் ஆண்டில் காலமாகி விட்டார். அவருக்கு அம்பிகா அம்மாள், பிச்சைமணி என்ற இரு மனைவிகள் உள்ளார்கள். இதில் முதல் மனைவி அம்பிகாஅம்மாள் மூலம் சிவகலை, 1ம் பிரதிவாதி மோகன்தாஸ், 2ம் பிரதிவாதி யோகானந்தம் ஆகியோர் ஆண், பெண் வாரிசுகள் ஆவார்கள். இரண்டாவது மனைவி பிச்சைமணி மூலம் வாதி அருண்மொழி, 3ம் பிரதிவாதி பேபியின் கணவர் ரவீந்திரன், செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, ரெத்தினகுமார், சித்ரகலா, நந்தினி ஆகிய 10 நபர்கள் ஆண், பெண் வாரிசுகள் ஆவார்கள்.இந்த வாதி தன் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் மீது தனக்கு சேர வேண்டிய 1/10 பாகவீதம் கேட்டு 27.02.2013ம் தேதியில் அறிவிப்பு கொடுத்தார். அதைப் பொறுத்து இந்த வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் இந்த வாதி, வாதியின் உடன்பிறந்த சகோதர, சகோதரி மற்றும் இறந்துபோன சகோதரர் வாரிசுகள் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்த்து வாதி தனக்கு சேர வேண்டிய 1/10 பாசுவீதத்திற்கு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.33/2015 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இறுதிப்பட்டியலில் விசாரணைக்கு

வந்து தற்போது விசாரணைக்காக 22.08.2017ம் தேதியில் போடப்பட்டுள்ளது. இந்த வாதி பாகப்பிரிவினை வழக்கில் தங்களுக்கும் பாகம் உண்டு என கட்சியாடும் இதர சகோதர, சகோதரிகளுக்காகவும கூட்டு சொத்துரிமையாளர் என்ற முறையில் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் இந்த வழக்கு சொத்தைப் பொறுத்து இந்த வழக்கின் 1 முதல் 5 பிரதிவாதிகள் இறந்த வாதியின் தகப்பனார் மாரியப்ப வள்ளாலத்தேவர் பெயரிலும், முதல் மனைவி அம்பிகாஅம்மாள், இரண்டாவது மனைவி பிச்சைமணி அம்மாள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் பெயரில் இருந்த சொத்துக்களை தங்கள் பெயருக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் மாற்றிக் கொண்டு அவை அனைத்தும் தங்களுக்கு மட்டுமே சொந்தம் எனவும், இந்த வாதிக்கும், வாதியின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகளுக்கும் பாகம் இல்லை என உரிமை கொண்டாடி வருவதுடன் தாவா சொத்து தங்களுக்கு மட்டும சொந்தம் என்று காட்டி 6ம் பிரதிவாதியான விவசாய காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்து 6 முதல் 10 பிரதிவாதிகள் மூலம் பல லட்சங்களை காப்பீட்டு தொகையாக 7ம் பிரதிவாதியான தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் முலம் பெற்றுள்ளார். இதைப் பொறுத்து வாதியும் அவரது உடன்பிறந்த சகோதரிகளும் கடந்த 02.02.2017ம் தேதியில் தாவா சொத்து தங்கள் தகப்பனாருக்கு சொந்தமெனவும், அவர் எந்தவித ஆவணமும் எழுதி வைக்காமல் காலமாகி விட்ட விவரத்தையும், மன்னார்குடி சார்பு நீதிமன்ற பாகப்பிரிவினை வழக்கு நடந்து வரும் விவரத்தையும் தெரிவித்து எந்தவித பணப்பட்டுவாடா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகளோ, காப்பீட்டு தொகையோ வழங்கக் கூடாது எனவும் கண்டு அறிவிப்பு கொடுத்தார். அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்ட 10ம் பிரதிவாதியான மாவட்ட ஆட்சியர் பதிலறிவிப்பு கொடுத்துள்ள நிலையில் 7 முதல் 9 பிரதிவாதிகள் எந்தவித பதிலறிவிப்பும் அளிக்காததுடன் அரசால் வழங்கப்பட்டுள்ள விவசாய காப்பீட்டுத் தொகை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள்.

மேலும் 1 முதல் 5 பிரதிவாதிகள் இந்த வாதிக்கு சேர வேண்டிய பாகவீதத்தையும், வரும்படியையும் கொடுக்காமல் ஏமாற்றி வருகிறார்கள்.

இதன் காரணமாக வாதி 21.08.2017 ம் தேதியில் 7 ம் பிரதிவாதியை நேரடியாக சந்தித்து தனது ஆட்சேபணையை தெரிவித்தநிலையில் நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்று வந்தால் மட்டுமே பணப்பட்டுவாடாவை நிறுத்த முடியும் என தெரிவித்து விட்டார். இதன்காரணமாக வாதி தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினைக்காக வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 7 ம் பிரதிவாதி எந்தவித விவசாய காப்பீட்டு தொகையோ மற்றும் பணப்பட்டுவாடாவும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வாதி வழக்கின் 8, 9 மற்றும் 10 ம் பிரதிவாதிகள் அரசு தரப்பினர்களாக இருப்பதால் பிரிவு 80-ன் கீழ் 2 மாத அவகாசம் கொடுத்து அறிவிப்பு அளித்தும் பிரதிவாதிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் 6 முதல் 10 பிரதிவாதிகள் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2). **<u>1 ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2 முதல் 5 பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்ட எதிர் வழக்குரை சுருக்கம்</u>**:-

2.1) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படியும், நியாயப்படியும், உண்மை நிலவரங்கள்படியும் நிலைநிற்க தகுந்த தல்ல. வாதிக் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிக்கு கிடைக்க கூடியதல்ல. வாதியால் உண்மை நிலவரங்களை மறைத்து தவறான விவரங்களின் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாவில் கண்டுள்ள சித்தமல்லி கிராமத்தில் உள்ள 8.23.5 ஏர்ஸ் நஞ்சை நிலங்கள் யாவும் வாதி மற்றும் 1 ம் பிரதிவாதியின் தகப்பனாரான மாரியப்ப வள்ளாள தேவருக்கு சொந்தமான சொத்துக்கள் கிடையாது. தாவாவில் கண்டுள்ள

மன்னார்குடி தாலுக்கா, சித்தமல்லி கிராமத்தில் உள்ள 1வது அயட்டசொத்தான புல எண்.211/5 ல் உள்ள 0.04.5 ஏர்ஸ் நிலம் மற்றும் 2 வது அயிட்ட சொத்தான புல எண்.378/5 ஏ -ல் 0.09.5 ஏர்ஸ் நிலமும் மற்றும் 25 அயிட்ட சொத்தான புல எண்.585-ல் 0.00.5 ஏர்ஸ் நிலமும் மாரியப்ப வள்ளாள தேவருக்கு சொந்தமான சொத்துக்கள் கிடையாது. மேற்படி நிலங்கள் அவருடைய குத்தகை பாத்தியத்திலும் இருந்த சொத்துக்கள் கிடையாது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவாவில் நஞ்சை நிலங்கள், மனைக்கட்டுகள் மற்றும் புஞ்சை நிலங்கள் ஆகியவைகளை சேர்த்து தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நஞ்சை நிலங்களில் சாகுபடி செய்யப்படும் விவசாய பயிர்களுக்கு மட்டுமே விவசாயியால் நெல் பயிர் சாகுபடி செய்யும் நிலங்களுக்கு பயிர் காப்பீடு நிறுவனத்தின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு சாகுபடி செய்யும் விவசாயி அதற்குரிய பிரி'யம் தொகையை செலுத்தும்பட்சத்தில் பிரிமீயம் தொகை செலுத்தப்படும் நபரால், விவசாயியால் சாகுபடி செய்யப்பட்ட நிலங்களுக்கு இயற்கை இடர்பாடுகளான வறட்சி மற்றும் வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படும் நிலையில் பயிர் காப்பீட்டு தொகையானது எவ்வளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ அவ்வாறு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு தக்கவாறு இழப்பீட்டு நிறுவனத்தால் கண்டறியப்பட்டு அதற்குரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படும். வழக்குரையில் காணப்பட்டுள்ள சொத்துக்கள் வாதி அருண்மொழியால் சாகுபடி செய்யப்பட்டது கிடையாது. அவரால் பிரிமீயம் தொகையும் செலுத்தி வைக்கப்பட்டது கிடையாது. அதனடிப்படையில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா முதலெடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாக உள்ளது. வாதியின் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள ஹெக் 8.23.5 ஏர்ஸ் நிலங்கள் யாவும் மாரியப்ப வள்ளாள தேவரின் நிலங்கள் கிடையாது. மேற்படி மாரியப்ப வள்ளாள தேவருக்கு மனைவி அம்பிகா அம்மாள் ஆவார். மனைவி அம்பிகா உயிரோடு இருக்கும்போதே பிச்சைமணி என்பவருடன் சேர்ந்து வாழ்க்கை நடத்தினார். அவருடன்

சேர்ந்து வாழ்க்கை நடத்தினாலும் அவருக்கு மனைவி என்ற அந்தஸ்து கிடையாது. மேற்படி பிச்சைமணி சட்டப்படியான உரிமையும் கோர முடியாது. மேற்படி அம்பிகா மூலம் பிறந்தவர்தான் வழக்குரையில் கண்டுள்ள 1ம் பிரதிவாதியான மோகன்தாஸும் மற்றும் சிவகலை, யோகானந்தம், ஜான்சி ராணி என்கிற லெட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள். அதில் ஜான்சி ராணி என்கிற லெட்சுமி சிவாஜி என்பவரை திருமணம் செய்துகொண்டு அவர்மூலம் சிவமதி என்கிற மகள் இருந்து வருகிறார். மேற்படி ஜான்சிராணி என்கிற லெட்சுமி தற்போது காலமாகிவிட்டார். மாரியப்ப வள்ளாள தேவர் பிச்சைமணி என்பவருடன் சேர்ந்து வாழ்க்கை நடத்தியதன் மூலம் வாதியான அருண்மொழி மற்றும் செந்தில்குமாரி (எ) நந்தினி, ரவீந்திரன், செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, சித்ரகலா, ரெத்தினகுமார் ஆகியோர் பிறந்தார்கள். அதில் ரவீந்திரன் என்பவர் திருமணமாகி இறந்துவிட்டார். அவரது மனைவிதான் இந்த வழக்குரையில் கண்டுள்ள 4ம் பிரதிவாதியான பேபி ஆவார். மேற்படி ரவீந்திரன் - பேபியின் மகள்தான் ரேஷ்மா மகன் தேவேந்திரன் ஆவார்கள். அவர்கள் தாவாவில் 3ம், 4ம் மற்றும் 5ம் பிரதிவாதிகளாக சேர்க்கப் பட்டுள்ளனர்.

2.2) மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருந்தபோது அவருக்கு சொந்தமான சொத்துக்களை பொறுத்து எவ்விதமான எழுத்துபூர்வமான ஏற்பாடுகளும் செய்து வைக்காமல் காலமாகிவிட்டார் என்று சொல்லியுள்ளது வாதியின் வழக்குரையின் தோதிற்காக உண்மைக்கு புறம்பாக சொல்லப்பட்டவையாகும். மேற்படி மாரியப்ப வள்ளாள தேவர் உயிரோடு இருந்த காலத்தில் கடந்த 1986ம் ஆண்டில் அவரது மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோருக்கிடையே வாய்மொழியாக பஞ்சாயத்தார்கள் மற்றும் குடும்ப முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சொத்துக்கள் பிரிவினை செய்து கொள்ளப்பட்டு அதனடிப்படையில் மாரியப்ப வள்ளாள தேவர் உயிருடன் இருந்த காலத்திலேயே தனித்தனி பட்டா ஏற்பட்டு அதனடிப்படையில் சொத்துக்கள் பிரிவினை செய்யப்பட்டதன்

அடிப்படையில் அவரவர்கள் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்தது. அதனடிப்படையில் மாரியப்ப வள்ளாள தேவரின் பெண்களான வாதி அருண்மொழி, மற்றும் ஜான்சிராணி (எ) லெட்சுமி, சிவகலை, செந்தமிழ்செல்வி, ஹேமாவதி, சித்ரகலா, செந்தில்குமாரி (எ) நந்தினி ஆகியோர்களுக்கு சித்தமல்லி கிராமத்தில் உள்ள பட்டா எண்.769-ல் உள்ள சர்வே எண்.484/1பி-ல் உள்ள 1.38.0 ஏர்ஸ் மேற்படி ஏழு நபர்களுக்கும் பிரிவினை செய்து கொடுக்கப்பட்டது. அவ்வாறு பிரிவினை செய்து கொடுக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து மேற்படி நபர்கள் திருமணமாகி அவரவர்கள், அவரவர்கள் கணவருடன் வெளியூரில் வசித்து வந்ததால் மேற்படி 7 நபர்களுக்கு கூட்டாக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டதாலும் அவரவர்களால் தனித்தனியாக சாகுபடி செய்ய முடியாத நிலையில் மேற்படி நபர்கள் இந்த 1ம் பிரதிவாதியிடம் சொத்துக்களை குத்தகைக்கு விட்டு அதிலிருந்து கிடைக்ககூடிய குத்தகை வருமானத்தை மேற்படி 7 நபர்களும் அடைந்து கொண்டு வருகிறார்கள். மேற்படி நிலங்கள் இந்த 1ம் பிரதிவாதியின் குத்தகை சாகுபடி பாத்தியத்தில் இருந்து வருவதால் இந்த 1ம் பிரதிவாதி மேற்படி நிலங்களை குத்தகை சாகுபடி செய்து வருவதால் நிலங்களை குத்தகை சாகுபடி செய்து வருகிற நபர் என்ற முறைமையில் மேற்படி நிலங்களுக்கு பிரிமீயம் தொகை செலுத்தப்பட்டுள்ளது. விவசாய சாகுபடி செய்துவரும் பிரிமீயம் தொகை செலுத்திய நபர்தான் பயிர் காப்பீட்டுக்குரிய இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியும். இந்த உண்மை விவரங்களை மறைத்து வாதியால் தவறான விவரங்களை கண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.3) அதுபோல் மாரியப்ப வள்ளாள தேவரின் மகன்களான மோகன்தாஸ்,யோகானந்தம், மற்றும் ரவீந்திரன் ரெத்தினகுமார் ஆகியோர்களுக்கும் தனித்தனியாக சொத்துக்கள் பிரிவினை செய்து கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் அவரவர்கள் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் நிலங்கள் இருந்து வருகிறது.

அதனடிப்படையில் ரவீந்திரன் காலமான பின்னர் ரவீந்திரனுக்கு சொந்தமான சொத்துக்களை அவரது மனைவி 3ம் பிரதிவாதி பேபி, 4ம் பிரதிவாதி தேவேந்திரன், 5ம் பிரதிவாதி ரேஷ்மா ஆகியோர்களால் வாரிசுதாரர் முறைமையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அவர்களால் சாகுபபு செய்யப்பட்டுவரும் நிலங்களுக்கு அவர்களால் பிரிமீயம் தொகை செலுத்தப்பட்டு அவர்களுக்கே இழப்பீடு தொகை கிடைக்க வேண்டியதாக இருக்கிறது. 2ம் பிரதிவாதியான யோகானந்தம் அவர்களால் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலங்களுக்கு அவரால் பயிர் காப்பீடு பிரிமீயம் தொகை செலுத்தப்பட்டு அவரால் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலங்களுக்கு அவருக்கே இழப்பீடு தொகை கிடைக்க வேண்டியதாக இருந்து வருகிறது.

2.4) காலஞ்சென்ற மாரியப்ப வள்ளாள தேவருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்களை உயில் எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த உயில் அடிப்படையில் 1ம் பிரதிவாதி மோகன்தாஸ் வழக்கு சொத்தை கிடைக்க பெற்று அவருடைய தனித்த அனுபவத்திலிருந்து வருகிறது என்றும், பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கவில்லை என்றும், வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி அனுபவத்திலிருந்து வருவதால் அவர் சாகுபடி செய்து வரும் நிலங்களுக்கு பயிர் காப்பீடு பெற உரிமை உடையவர் என்றும், இதற்கு விரோதமாக பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகையை தடை செய்யும் நோக்கில் வாதி செயல்பட்டு உள்ளார் என்றும், வாதி வழக்கு நிலைக்கு தக்கது அல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், தெரிவித்துள்ளார்.

3) <u>6ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 7 முதல் 10 பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்:-</u>

வாதி வழக்கு சட்டப்படியும். நியாயப்படியும் நிலைக்கதக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.33/2015-ல் தரப்பினர்கள் அல்ல. இந்த பிரதிவாதி, தாங்கள்

இந்த பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தும் நிறுவனங்களில் ஒன்று என்றும், இந்தத் திட்டத்தின் கீழ், முதன்மை வேளாண் கூட்டுறவு சங்கத்தின் மூலம் காப்பீடு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு, இந்த பிரதிவாதி ஒவ்வொரு பயிருக்கும் நோடல் வங்கியிடமிருந்து அதாவது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிடமிருந்து அறிவிக்கப்பட்ட பகுதி வாரியாக மற்றும் பயிர் வாரியான ஒருங்கிணைந்த பிரீமியத்தைப் பெறுகிறார். உரிமைகோரல் மதிப்பீட்டிற்குப் பிறகு, ஏதேனும் தகுதியான உரிமைகோரல்கள் இருந்தால், அது நோடல் வங்கிகள் மூலம் மட்டுமே செலுத்தப்படும், தனிப்பட்ட விவசாயிகளுக்கு நேரடியாக அல்ல. இந்த வழக்கில், வாதி எந்தத் திட்டம், பருவம் மற்றும் பயிர் பிரீமியத்தைச் செலுத்தியுள்ளார் என்பது பற்றி எங்கும் குறிப்பிடவில்லை என்றும், இந்த பிரதிவாதிக்குத் தெரிந்தவரை, 7 வது பிரதிவாதி ஏற்கனவே தனது வங்கிக் கணக்கில் தகுதியான கோரிக்கைத் தொகையை 1 வது பிரதிவாதிக்கு அனுப்பியுள்ளார், மேலும் வழக்கின் முடிவுக்காகக் காத்திருக்கிறார். எனவே, வாதியின் கோரிக்கை பயனற்றதாகிவிட்டது என்றும், இந்த பிரதிவாதி வழக்கில் தேவையற்ற ஒரு தரப்பினர் ஆவார். மேலும், வாதி தனது குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான தகராறில் இந்த பிரதிவாதியை பலிகடாவாக இழுத்து வருகிறார். இது ஆரம்பத்திலேயே நிறுத்தப்பட வேண்டும். இந்த பிரதிவாதிக்கு எதிராக வழக்குத் தொடர எந்த காரணங்களும் எழவில்லை.

4) **<u>வாதி வழக்குரை பிரதிவாதிகளின் எதிர்வழக்குரைகள் இரண்டையும் பரிசீலித்து கீழ்கண்ட எழுவினாக்களை வனைந்துள்ளது.</u>**

1. வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?

2. வழக்கு சொத்துக்களானது 1 முதல் 5 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்று தெரிவித்துள்ளது உண்மையா?

3. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?

**5)** இந்த வழக்கில் வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வழக்கு சொத்துக்களை பொறுத்தமட்டில் வாதி வழக்கு சொத்தில் அவருக்குரிய பாகத்தை கேட்டு அசல் வழக்கு எண்.33/2015 ஐ இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கின் பரிகாரமும், பாகப்பிரிவினை பிரித்து ஒப்படைக்கும் வரையில் எந்தவிதமான பணபலன்கள், பயிர்காப்பீட்டு தொகைகள் இந்த 1 முதல் 5 பிரதிவாதிகள் பெறக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையின்போது வாதியின் வழக்கு பொய் வழக்கு என்றும், வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் தனித்த அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்தில் வாதிக்கு எந்தவொரு பாகமும் கிடைக்ககூடியதல்ல என்றும், இந்த 1ம் பிரதிவாதி விரிவான எதிர்வழக்குரையில் அசல் வழக்கு எண்.33/2015 ல் தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு பரிகாரம் இயற்கை நலனுக்கு விரோதமானது என்றும் தள்ளபடி செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார் .

**6)** 6 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கு எந்த வகையிலும் நிலைக்கதக்கதல்ல என்றும், வழக்கு பொறுத்து இந்த பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**7)** இந்த வழக்கில் வாதி வா.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் எந்தவிதமான சாட்சிகளும் ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை

**8) <u>எழுவினாக்கள் 1 மற்றும் 2:-</u>**

மேற்படி எழுவினாக்களில் கண்டப்படி இந்த வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க அதிகாரமுடையவரா? என்பதும், 1 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவத்தில் வழக்கு சொத்துக்கள் உள்ளதா? என்று சொல்வது உண்மையா? என்பதும் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது.

**8.1)** இந்த வழக்கானது ஆரம்பத்தில் மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.76/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நடைபெற்று வந்துள்ளது. அதன்பின்னர் இதே வாதி இந்த நீதிமன்றத்தில் மேற்சொன்ன 1 முதல் 5 பிரதிவாதிகள் மற்றும் அவருடைய உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் மற்றும் இந்த வழக்கில் சேர்க்கப்படாத நபர்கள் மீதும் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். இரண்டு வழக்குகளில் உள்ள தரப்பினர்கள் ஒரே நபர்கள் என்பதாலும், சொத்து ஒரே சொத்து என்பதாலும் இரண்டு வழக்குகளையும் இணைத்து நடத்த வேண்டும் என்று திருவாரூர், மாவட்ட நீதிமன்றத்தில் Trs.O.P. 33/2017 தாக்கல் செய்து அதன் அடிப்படையில் இரண்டு வழக்குகளும் நடத்த உத்தரவிடப்பட்டதாகவும், மேற்படி அசல் வழக்கு எண்.76/2017 இந்த நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்த நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.128/2021 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இரண்டு வழக்குகளையும் இணைத்து நடத்த உத்தரவிட்டிருந்தாலும், இருதரப்பினரும் வழக்கை இணைத்து நடத்தவில்லை. தனித்தனி விசாரணை செய்து தனித்தனியாக ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். ஆகவே இரண்டு வழக்குகளிலும் தனித்தனியாக தீர்ப்பு வழங்க தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.33/2015-ல் இதே வழக்கு சொத்துக்கள் தான் காணப்படுகிறது. அந்த வழக்கு சொத்துக்களில் கண்ட சில அயிட்ட சொத்துக்களை பொறுத்தமட்டில் வாதிக்கு பாகப்பிரிவினை கிடையாது என்றும், மீதமுள்ள சொத்துக்களை பொறுத்து கிடைக்க கூடியது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**8.3)** இந்த வழக்கை பொறுத்தமட்டில் வழக்கு சொத்தின் அனுபவத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் இருந்து வருவதாக 1 முதல் 5 பிரதிவாதிகள் வழக்கில் தெரிவித்துள்ளார்கள். வழக்கு எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு நடந்து வருகிறது என்று தனக்கு தெரியாது என்று வாதி கூறியுள்ளார். குறிப்பாக பயிர்கடன் எவ்வளவு பெறப்பட்டுள்ளது. எந்தெந்த சர்வே எண்ணை பொறுத்து பெறப்பட்டுள்ளது. பாகப்பிரிக்கப்படாத ஒரு வழக்கில் அசல் வழக்கு எண்.33/2015 ல் கண்ட மற்றைய தரப்பினர்களை சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைக்ககூடியது அல்ல என்று முடிவு செய்யப்படுகிறது. பாகப்பிரிவினை வழக்கில் (Suit for Partition), குடும்ப சொத்து தொடர்பாக இன்னும்

பாகப்பிரிவினை நடக்காத வரை எல்லா பங்குதாரர்களும் co-owners ஆகவே கருதப்படுவர். எனவே, ஒரே பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சொத்திலிருந்து வரும் வருவாய் / நிவாரணம் / காப்பீடு தொகை போன்றவற்றை முழுவதுமாக பெற்றுக் கொள்ளக் கூடாது என்று தடை உத்தரவு கேட்கலாம்.அந்த விவசாய காப்பீட்டு தொகை உண்மையில் குடும்ப சொத்துடன் தொடர்புடையதா? அந்த தொகை பிரதிவாதி தனிப்பட்ட பயிர் காப்பீட்டா அல்லது குடும்ப நிலம் அடிப்படையிலானதா? தொகை வழங்கப்பட்டால் பிற பங்குதாரர்களின் உரிமை பாதிக்கப்படுமா? சாதாரணமாக நீதிமன்றம் நேரடி தடை உத்தரவு கொடுப்பதைவிட அந்த தொகை பெறப்பட்டால் அதை கணக்கில் கொண்டு பாகப்பிரிவில் சரிசெய்யலாம் என்று கூறும். அதாவது: பணத்தை பெறுவதை தடுக்காமல் "subject to final partition" என்று சொல்லும். பிரதிவாதி மற்ற பங்குதாரர்களை ஏமாற்றி தொகை பெற முயற்சிப்பது தொகை குடும்ப நிலத்தை அடிப்படையாகக் கொண்டது பிற பங்குதாரர்களின் உரிமை முற்றிலும் மறுக்கப்படுகிறது, பாகப்பிரிவினை ஏற்படும் வரை, குடும்ப நலத்தை அடிப்படையாகக் கொண்டு கிடைக்கும் விவசாய காப்பீட்டு தொகையை பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் பெறக் கூடாது; பெற்றால் அது அனைத்து பங்குதாரர்களின் நலனுக்காக நீதிமன்ற கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆக மேற்காணும் சூழ்நிலையில் வாதி கேட்டிருக்க கூடிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்க கூடியதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்து வரும் 1முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதல்ல என்று மேற்சொன்ன இரண்டு எழுவினாக்களுக்கும் முடிவு செய்யப்படுகிறது.

9) **<u>கூடுதல் எழுவினா -1:-</u>**

கூடுதல் எழுவினாவை பொறுத்தமட்டில் இந்த வாதிக்கு ஏதேனும் பரிகாரம் வழங்க வேண்டியுள்ளதா? என்று பார்க்கின்றபோது முடிவு செய்யப்பட்ட எழுவினாக்கள் அனைத்தும் வாதிக்கு எதிராக முடிவு செய்யப்படப்படியால் கூடுதலாக எந்தவொரு பரிகாரமும் வழங்க வேண்டியதில்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

10) இறுதியாக,

1) வாதியின் வழக்கு முழுவதும் தள்ளபடி செய்யப்படுகிறது.

2) தரப்பினர்களின் உறவுமுறைகளை அனுசரித்து செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் என்னால் இத்திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MUTHURAMAN Digitally signed by MUTHURAMAN Date: 2026.03.12 19:41:43 +0530

சார்புநீதிபதி,

மன்னார்குடி.

**பின் இணைப்பு:-**

1. **வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி:-**

வா.சா.1 அருண்மொழி (வாதி)

2. **வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 22.08.2017 | வாதி குடும்ப உறுப்பினர்கள் பெயரில் பட்டா இருந்ததற்கான சிட்டா நகல்கள் -கோர்வை 11 | கணினி பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.2 | ---- | மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.33/2015 வழக்குரை | நகல் |
| வா.சா.ஆ.3 | --- | மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண்.33/2015 எதிர் வழக்குரை | நகல் |
| வா.சா.ஆ.4 | 02.02.2017 | வாதி வழக்கறிஞர் மூலம் 7 முதல் 10 பிரதிவாதிகளுக்கு அளித்த அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் அஞ்சல் ரசீதுகளுடன் (நெ.3) | அலுவலக நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | --- | மேற்படி அறிவிப்பை 7 முதல் 10 பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான பதிவஞ்சல் ஒப்புதல் அட்டை | அசல் |
| வா.சா.ஆ.6 | 23.02.2017 | மேற்படி அறிவிப்புக்கு 10 ம் பிரதிவாதி அலுவலகத்தில் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பியா குறிப்பாணை | அசல் |

**3. <u>பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>**

MUTHURAMAN
Digitally signed by MUTHURAMAN
Date: 2026.03.12 19:41:54 +0530

**சார்பு நீதிபதி,**

**மன்னார்குடி.**